**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**அசல் வழக்கு எண்.** 03/19

வாக்குமூலம்..வா.சா.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சவரிமுத்து | ஜாதி | |
| த/பெ. | அருளானந்து | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 40 / 2025 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 04.02.2025 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**2-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வழக்கறிஞர் சாட்சியம் அளிக்க வேண்டும் என்று சொன்னார். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை யார் சொன்னது என்றால் அண்ணாமலையின் மகன்கள் ராஜங்கமும், செல்வமும் சொன்னார்கள். அவர்கள் இருவரும் தான் நிரூபண வாக்குமூல விவரம் சொன்னார்கள் என்றால் ஆமாம். அதிற்கண்ட விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு தெரியும்.

2. வாதிகள் என்ன பரிகாரத்திற்காக வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சொத்திற்காக வழக்கு போட்டியிருக்கிறார்கள். சொத்தை விற்க கூடாது என்று வழக்கு போட்டியிருக்கிறார்கள். தாவா வழக்கு 2 இலக்க சொத்துகளுக்கு தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்தின் புல எண் தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா 2-வது அயிட்ட சொத்து ஆதியில் காளி மகன் நடேசனுக்கு சொந்தமான சொத்து என்றால் சரிதான். நடேசன் இறந்தபிறகு 2 அயிட்ட சொத்து அவரது மனைவி அஞ்சாம்மாளுக்கு பாத்தியமாக இருந்தது என்றால் சரிதான். 2 அயிட்ட சொத்து வடபுறம் 26 சென்ட் இடத்தை கடந்த 08.05.1997-ம் தேதி சுப்பிரமணிபுரம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 173/1997 ன் படி தகுந்த பிரதி பிரயோஜனத்திற்கு 2-ம் பிரதிவாதி மாரிமுத்து கிரையம் பெற்று அனுபவவித்து வரும் விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

3. அவ்வாறு 2-ம் பிரதிவாதி மாரிமுத்தால் கிரையம் வாங்கப்பட்ட 2-வது அயிட்ட சொத்து நாளது தேதிவரை 2-ம் பிரதிவாதி மாரிமுத்து விவசாய நெல் சாகுபடி செய்து வருகிறார் என்றாலும், அந்த விவரமும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்கு 1, 2 அயிட்ட சொத்துகள் 1,2 வாதிகளின் அனுபவத்தில் எந்த காலத்திலும் இருந்தது கிடையாது என்றால் சரிதான். வழக்கு 2-வது அயிட்ட சொத்து நாளவது தேதிவரை 2-ம் பிரதிவாதி மாரிமுத்துவின் அனுபவத்தில் தான் இருக்கிறது என்றால் சரிதான். வழக்கு 2-வது அயிட்ட சொத்தை பொருத்து 2-ம் பிரதிவாதிக்கு கிரையம் பாரதீகம் செய்ய உரிமை உள்ளது என்றால் சரிதான். அதனால் வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது இல்லை என்றாலும், வாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க வாதிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.